
சாரதாவின்
கலைவாணன்
டைரக்ஷன்.. P. புல்லையா B.A. * தயாரிப்பு.. V. நாராயணராவ்
வசனம்... ஸ்ரீதர்

# கலைவாணன்

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| A. நாகேஸ்வர ராவ் | ... | *காசிநாத்* |
| K. A. தங்கவேலு | .. | *ஹரி* |
| S. V. சகஸ்ரநாமம் | ... | *விஸ்வநாதன்* |
| S. V. ரங்கா ராவ் | ... | *மன்னன்* |
| V. நாகையா | ... | *ஏகம்பவாணர்* |
| K· சாரங்கபாணி | ... | *சிவன்* |
| P. S. வெங்கிடாசலம் | ... | *தர்மாதிகாரி* |
| K. நடராஜன் | ... | *சம்பு சாஸ்திரி* |
| V. M ஏழுமலை | ... | *மாரி* |

மற்றும் சேதுராமன், கிட்டான், ராமராவ், கிருஷ்ணமூர்த்தி, நாகரத்னம், ராஜா, ஸ்வாமி.

## நடிகையர்

| | | |
|---|---|---|
| அஞ்சலிதேவி | ... | *மாலா* |
| சாந்தகுமாரி | ... | *பார்வதி* |
| ராஜசுலோச்சனா | ... | *அமிர்தம்* |
| T. P. முத்துலெக்ஷிமி | ... | *ரத்னம்* |
| C. T. ராஜகாந்தம் | ... | *ரங்கநாயகி* |

# கலைவாணன்

## திரைக்கதை

கலைஞர்கள் தனிப்பிறவிகள். சமுதாயக் கட்டுப்பாடு, மதக்கோட்பாடு, ஆசாரசீலங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். ஆனால் கலைஞர்களும் கட்டுப்படும் சக்தியொன்றிருக்கிறது. அதுதான் காதல்! காதலும் கலையும் இணையும்போது அங்கேயொரு இன்ப இலக்கியமே உருவாகிறது. அதில் துன்ப அத்தியாயங்களும் இருக்கலாம். ஆயினும் முடிவு ஆனந்தமாகவே இருக்கும்.

சுருங்கச் சொல்வதென்றால் இதுதான் காசிநாத்தின் கதை. அவன் ஒரு கலைவாணன். இன்னிசை பாடி இன்பக் கதிர் பரப்பும் கலைஞன். விஸ்வநாதன் அவனது அண்ணன். பார்வதி அவனது அண்ணி. தாயில்லாத காசிக்கு அவள்தான் தாய்! ஏகம்பவாணர் என்ற கலைஞரின் குருகுலத்திலே இசை பயின்று வந்தான் காசி.

ஆடிப்பாடி பிழைக்கும் நாடோடிக் கலைஞர் கூட்டம் ஒன்று, காசியின் பிறப்பிடமான வித்யா நகருக்கு வந்தது. அழகி மாலா, சிவன், ஹரி, என்பவர்களே அக்கூட்டத்தின் முக்கிய நபர்கள். தங்களை எவராலும் ஆடலிலும் பாடலிலும் வெல்ல முடியாதென சவால் விட்டனர். இதைக் கேள்விப்பட்ட காசி, சவாலில் அவர்களை எதிர்த்துப் பாடி வெற்றியடைந்தான்: வெற்றியிலும் ஒரு தோல்வி அவனுக்கு! அழகி மாலாவிடம் தன் நெஞ்சை இழந்துவிட்டான்!

காசியுடன், அவனது குரு ஏகம்பவாணரைத் தரிசிக்க கலைஞர் கூட்டத்தினர் வந்தனர். நாகரீகமற்ற அநாசாரக் கூட்டமென்று கூறி அவர்களை அவமதித்து அனுப்பினார் ஏகம்பவாணர். இதுபற்றிக் கேள்விப்பட்ட விஸ்வநாதனும் காசியைக் கண்டித்தார்.

நாடோடிக் கூட்டத்தாரோடு சேர்ந்து காசியும் நாடகமாடப் போவதாக அறிவிப்பு வந்தது. இச்சேதி கேட்டு கோதிப்படைந்த மேல் சாதியினர், விஸ்வநாதனை அழைத்து, காசி கீழ்ச் சாதியாரோடு சேர்ந்தால் அவரது குடும்பத்தையே சாதியிலிருந்து விரட்டிவிடுவதாக எச்சரித்தனர்.

ஆத்திரமடைந்த விஸ்வநாதனைப் பார்வதி சாந்தப்படுத்தினாள். காசி நாடகமாடப் போகாமல் தடுப்பது தன் பொறுப்பென்று வாக்களித்தாள். அந்த வாக்கு பலிக்கவில்லை. அண்ணியிடம் அழுது கெஞ்சி, அனுமதி பெற்று நாடகமாடச் சென்றான் காசி.

திரும்பி வந்த அவனை வீட்டை விட்டு விரட்டினார் விஸ்வநாதன்; சாதியைவிட்டு விரட்டினார்கள் மேல்சாதியினர்.

மனங்கலங்கிய காசி, ஊராரின் அவச் சொல்லிலிருந்து மாலாவைக் காப்பாற்ற, ஆண்டவன் சன்னதியில் அவளை மணந்து கொண்டான்.

அன்பிலே கட்டுண்ட இருவரும், ஊர் ஊராக நாடகமாடி, முடிவில் தஞ்சை வந்தடைந்தனர். ஏற்கனவே இவர்களைப்பற்றி கேள்விப்பட்டிருந்த தஞ்சை மன்னன் மாறுவேடத்தில் வந்து கலைஞர்களின் நாடகத்தைக் கண்டு களித்தான். ஏகம்பவாணர் முன்னிலையில்

காசிநாதனை சமஸ்தான வாணனாக ஏற்று, மணிமகுடமளித்து கௌரவித்தான்.

இதனால் பொறாமை கொண்டாள் அமிர்தம்-அரண்மனை ஆடலழகி. பொறாமையை வளர்த்தனர் தர்மாதிகாரியும் சம்புசாஸ்திரி என்ற சனாதனத் தலைவரும். காசியை இழிநிலைக்குக் கொண்டுவந்து, மன்னரின் அன்பிலிருந்து அவனை விரட்ட வேண்டும். இதுவே அவர்கள் சூழ்ச்சி.

சூழ்ச்சி பலித்தது. அமிர்தத்தின் முயற்சியால் காசி குடிகாரனானான். மன்னரின் கட்டளையையே எதிர்க்குமளவுக்கு மாறினான். சினம் கொண்ட வேந்தன் அவனைச் சிறையிலே தள்ள உத்தரவிட்டான். உத்தமி மாலாவின் முயற்சியால் உண்மை வெளிவந்து, காசி விடுதலை பெற்றான்.

தஞ்சையைவிட்டு மீண்டும் அவர்கள் வித்யா நகருக்கு வந்தனர். ஆயினும் காசியின் குடிப்பழக்கம் மறையவில்லை. மதுவுக்காக மன்னனளித்த மகுடத்தையே விற்கத் துணிந்தான். தடுத்து புத்திமதி சொல்ல வந்த மாலாவுக்கு கிடைத்த பரிசு அடியும் உதையும்தான்.

காசியின் இந்நிலைபற்றி அறிந்த பார்வதி, கணவனின் கட்டளையையும் மீறி அவனிடம் வந்தாள். குடிபோதையிலே தடுமாறி நின்ற காசியைக் கண்டு, கொதிப்படைந்து, ஆத்திரம் தீர அவனை அடித்து நொறுக்கினாள். போதை நீங்கிய காசி இனி குடிப்பதில்லையென வாக்களித்தான். வீடு திரும்பிய பார்வதியை விரட்டியடித்தார் விஸ்வநாதன்.

பார்வதி, காசிவீட்டுக்குப் போன தகவல் கேட்டு, விஸ்வநாதனைத் தண்டிக்கக் கூட்டமாக வந்தனர் மேல்சாதியினர்.

காவேரி நதிப்பக்கம் சென்றுவிட்ட அண்ணியைக் காப்பாற்ற அலறித்துடித்தோடினான் காசி.

வெறிகொண்டு விஸ்வநாதனை வீழ்த்த நின்ற சாதிவெறியர்களின் முன்பு மாலா வந்தாள். அவளை அடித்து வீழ்த்தினர் சாம்பு சாஸ்திரி. இச்சம்பவம் விஸ்வநாதனின் கண்களைத் திறந்தது.

இந்நேரத்தில், பார்வதி, காவேரியில் விழுந்துவிட்டதாக செய்தி வரவே, அனைவரும் ஓடினர்.

நீரிலே முழுகி நினைவற்றுக் கிடந்த அண்ணியை இறைவன் சன்னதியிலே கிடத்திக் கதறினான் காசி.

*அவன் குரல் ஆண்டவனை எட்டியதா?*
*பார்வதி நினைவு பெற்று எழுந்தாளா?*
*சாதிவெறியர்களின் மனம் மாறியதா?*
*காசி—மாலா வாழ்விலே மறுமலர்ச்சி பிறந்ததா?*

விடையை வெண்திரை விளக்கும்

**இப்படத்தின் பாடல்களை கொலம்பியா,**
**எச். எம். வி. ரிக்கார்டுகளில் கேளுங்கள்.**

**அம்பிகாபதிக் கோவை**

*குரல் :*
**திருச்சி லோகநாதன்**

**குரு:** ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள்
என்னுள்ளத்துள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்.

---

*இயற்றியவர் :*
**ராமய்யாதாஸ்**

*குரல் :*
**கண்டசாலா,**
**P. B. ஸ்ரீனிவாஸ்,**
**பாணிக்கிரகி**

**காசி :** கலை சாரதாதேவி என் தாயே
கனிவான இன்பமருள்வாயே—நீயே **(கலை)**

**மாணவன் 1 :** கானமேவும் இயலோடிசையாலே

**மாணவன் 2 :** கலைஞர் உள்ளமதில் காவியம் போலே

**காசி :** கலைஞர் உள்ளமதில் காவியம் போலே
கண்கள் போல் உலவும் பாரதியே
கடைத்தேறிட வரமருள்
மறை புகழ்திருக் **(கலை)**

---

*இயற்றியவர் :*
**ராமய்யாதாஸ்**

*குரல் :*
**P. சுசீலா கோஷ்டியினர்**

**மாலா :** இருக்காரா இங்கிருக்காரா—எனை
வென்றிடும் ஜோடி இருக்காரா ?

கோரஸ்

ஹோய் ஹொய் ஹொய்
ஹோய் ஹொய் ஹொய்

**மாலா :** இருக்காரா இங்கிருக்காரா—எனை
வென்றிடும் ஜோடி இருக்காரா
ஆடலிலே பாடலிலே
அலுக்கிக் குலுக்கும்
எந்தன் அழகினிலே **(இரு)**

ஓ.........
கஜ்ஜை கட்டி நான் ஆடினால்
லஜ்ஜை விட்டு நான் பாடினால்

**ஹரி :** ஹை ஆடினால் நான் பாடினால

**மாலா :** ஜிகுஜிகு நடையிலும்
தகதக உடையிலும்
ஜில்லென உள்ளமே
துள்ளிடக் கிள்ளிடுவேன்
சொக்கிய மனமும் பண்படுமே
சொர்க்கமும் இங்கே தென்படுமே
மெய் மறந்திடுமே **(இரு)**

ஸரிரிம மபபநித ஸ்வரராகமுடன்
சரளயமாகவே பாடிடுவேன்
தத்திமி திமிகிட தளாங்கு திமியென
ஜதியுடன் நாட்டியமாடிடுவேன்
சரிஜோடியோடு சவாலு செய்வேன்

**ஹரி :** நான் சவாலு செய்வேன்
சவாலு செய்வேன்

**மாலா :** சவால்!

**ஹரி :** சவால்!!

**சிவன் :** சவால்!!!

**மாலா :** ஜெயமடைந்தோருக்கு
சலாமும் செய்வேன்

**கோரஸ்**

ஜீ......ஜியோஜீ......ஜீ.....ஜியோஜீ......

---

*இயற்றியவர் :*
**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

*குரல் :*
**T. M. சௌந்திரராஜன்**
**ஜிக்கி கோஷ்டியினர்**

**காசி :** சவால் சவாலென்று
சதிராடும் பெண்ணாளே—நெஞ்சில்
தன்மானத் துணிவிருந்தால்
தாண்டிவா, முன்னாலே!

**ஹரி :** அடி சக்கேன்னானாம்!
வாய்யா வா! பொண்ணு, ஆவட்டும்

**மாலா :** பார்த்தாலே கண்ணடிமை—என்
பக்கம் வந்தால் நெஞ்சடிமை—என்னைப்
போட்டியிலே வென்றவர்கள்—இந்தப்
புவிதனிலே யாருமில்லை!

அய்யா!
சரியாத் தெரிஞ்சா
சவால் விடு!
சரக்கு இல்லாட்டா
சலாம்கொடு!—இங்கே
சரக்கு இல்லாட்டா
சலாம் கொடு!

**ஹரி :** இந்தாய்யா! முதல்லே நீபோடு கேள்வியை
பதிலை பிச்சுப்பிச்சு வைக்கிறோம்.

**காசி :** காடும் வளமுடைய நாடும்—பல
காத தூரமும் கடந்து ஓடும்
வளைந்து கலைந்து
பிரிந்து பின்னும் கூடும்
நினைத்தபடி கண்ட பக்கம்
சுற்றி வரும்—அது என்ன?

**ஹரி :** இவ்வளவு தானா! நாயி!

**சிவன் :** சும்மா இருடா, முந்திரிக்கொட்டை!

**மாலா :** மேட்டிலே நிற்காது
வேற்றுமைகள் பார்க்காது
காட்டுப் பயிர்களதைக் காணவிட்டால் வாழாது
நாடெல்லாம் சுற்றிவரும்
நன்மைதரும் அதன்பேரு
நதியய்யா, எந்தன் பதிலய்யா!

**ஒருவன் :** காட்டம்மா உன் கைவரிசையை!

**மாலா :** ஆளைக் கண்டு மருண்டோடும் மானுமில்லை—ரொம்ப
ஆழத்திலே நீந்திவரும் மீனுமில்லை
அங்கமெல்லாம் பாய்ந்து விடும்—அம்புமில்லை
மலரில் அல்லும் பகல் வட்டமிடும்—வண்டுமில்லை!

**சிவன் :** என்ன சாமி அது?

**ஹரி :** முழிக்கிறியே, இப்போ ஒத்துக்கிறியா?

**காசி :** தூர இருந்துகொண்டே
தொடாமல் திருடுவதும்
சுற்றி விட்ட பம்பரம்போல
சுழன்று வட்டம் போடுவதும்
வீரர்களும் மயங்க—மோக
வலை வீசுவதும்—காதல்
விளையாடுவதும் கண்களம்மா!

**சிவன் :** கண்கள்!

**ஹரி :** கண்கள்...சொல்லிப்பிட்டாரே.

**காசி :** ஏனம்மா!
நான் கேட்கும் கேள்விகளுக்குப்
பதில் சொல்

**சிவன், ஹரி :** ஓ!

**காசி :** பாம்புத்தலையில் தகததகதிமி
பார்த்தன் தேரில் ஜகண ஜண ஜண
பானை கடகட உரலும் தடதட
பார்வை திருதிரு மேனி கருகரு
பொருளும் என்ன—உன்
பதிலும் என்ன?

**மாலா :** பாம்புத்தலையில் நடனமாடி
பார்த்தான் தேரில் சங்கு முழக்கி
பானை உடைய வெண்ணை திருடி
உரலிலே கட்டுண்டு கிடந்தவன்
கமலக் கண்ணன்
கார்மேக வண்ணன்.

**காசி :** விபரமறியாத கன்னிப் பெண்ணுக்கு
வெட்கம் வருவது எப்போது

கோரஸ்

அது எப்போது?

**மாலா :** விளையாட்டாய் அவள் திருமணம் பற்றி
உரிய தோழிகள் பேசும்போது.

**காசி :** ஓயாமல் பேசும் மங்கையர் கூட
ஊமையாவது எப்போது?

கோரஸ

எப்போது

**மாலா :** காயாத வண்ணக் கமலக்கையை
காதலன் வந்து தொடும்போது.

**காசி :** தகதகவென கண்ணைப்பறிக்கும்
தண்ணீர் பட்ட உடனே கருக்கும்
சகல பேருக்கும் பொதுவாயிருக்கும்
சாதி வேற்றுமைதன்னை ஒழிக்கும்
சட சடவென தாவி யணைக்கும்
சருகைப் பிடித்து உணவாகப் புசிக்கும்
அது என்ன?...
சொல்லட்டுமா? நானே சொல்லட்டுமா?
தகதகவென கண்ணைப் பறிப்பதும்
தண்ணீர் பட்டஉடனே கருப்பதும்
சருகை விறகை உணவாகப் புசிப்பதும்
அனலம்மா—நீ
உணரம்மா!

---

*இயற்றியவர் :* **கம்பதாசன்** *குரல் :* **கண்டசாலா**

**காசி :** ஆடும் மயில் நீ வா—நடம்
ஆடும் மயில் நீ வா

ஆகாயத்தெரு நாடி வந்தது வெண்ணிலா
ஆசையின் புன்னகை அலை அலையாடுதே ! (ஆடும்)

அணிமலர்ச் சோலையில் பண்பாடும் பூங்குயில்
அடிக்கடி அழைக்கும் மோகினி நீயே
நினைவை......கனவை நிறவான வில்போல்
புனைந்தனன் உனக்கே சித்ரீகன் நானே
சித்ரீகன் நானே விசித்திரம் நீ தானே (ஆடும்)

பொன்னொளியாய்......
பொன்னொளியாய் பூத்திடும் மாலைத்தென்றலின் காற்றிலே
சிறுமல்லிகை அரும்பேதரும் பரிமளம் நீதானே
சிரிக்கும் சிங்காரமான கன்னித்தாரகை விண்ணின் மீதே
செந்தமிழ்தனில் பண்பொடு சொல்லிடும் உயிர்க்கவியே நானே
கவி—உணர்ச்சியும் நீதானே
வாராய்......மா மயிலே
வந்தது......கார்முகிலே

நீழல் நோக்கி நீயென்றெண்ணி
மனது மகிழுவேன்
அளவிலாத பிரியத்தினுல்
பிதற்றலாகினேன்
உனக்காகவே இவ்வேதனை
உன் ரூபமே ஆராதனை
என தாருயிர் துடிப்பினிலே உந்தனின் தண்டை ஓசை
விண்முத்தெனவே சிந்தும் பனி
எந்தனின் கண்ணீர் பூசை
வாராய் மாமயிலே
வந்தது கார்முகிலே.

---

*இயற்றியவர் :* அ. மருதகாசி *குரல் :* **கண்டசாலா, P. சுசீலா**

**மாலா :** வாராயோ நந்த முராரி—முகம்
பாராயோ கிரிதாரி

**காசி :** மாலை நேரத்திலே
யமுனு தீரத்திலே
வழிமேலே விழிவைத்தே
வாடி நின்ருளே ராதை (மாலை)

**மாலா :** மாய ஜாலம் ஏன் கண்ணு
நீலமேக வண்ணு
நீயில்லாத என் வாழ்வு
நிலவில்லாத வானமன்ரோ

மாலை நேரத்திலே
யமுனா தீரத்திலே
மாதவனே உன்னாலே
வாடுகிறேன் தனிமையிலே (மாலை)

கள்ளத்தனம் நானறிவேன்
கண்ணா நீ போபோ
சொல்லை மீறி நீ யாரிடம்
பல்லைக் காட்டி நின்றாய்—அந்தக்
கள்ளியிடம் போ போ

காசி : காணாதபோது தாபமா—நேரில்
கண்டாலே கோபமா?

மாலா : உன் மார்பில் இதுபோல நகக்குறி—இன்று
உண்டான விதமென்ன சொல் முராரி

காசி : சந்தேகம் ஏனடி என் கண்ணே—இந்தப்
புதர்முள்ளைப்பாரடி உன் முன்னே

மாலா : போதும் போதுமையா வெளிவேஷமே—இந்த
பேதையைச் செய்யாதே மோசமே

காசி : என் சொல்லைக் கேளடி இன்பமே—இந்த
மாதவனும் உனக்கேதான் சொந்தமே

மாலா : மாதவா

காசி : கண்மணி

மாலா : மாதவா

காசி : கண்மணி

மாலா : மாதவா

காசி : கண்மணி

---

*இயற்றியவர் :* அ. மருதகாசி

*குரல் :* சீர்காழி கோவிந்தராஜன் P. சுசீலா

மாலா : என் கண்ணில் அம்பும் உண்டு
என் சொல்லில் தேன் உண்டு
இங்கே பார் ஆசை மாமா ஓடிவா

காசி : கண்ணம்பைப் போடாதே
தெம்மாங்கு பாடாதே—கிட்டே
நான் வந்தால் ஓடாதே—என் ஆசைத்தங்கம்
கிண்டல் நீ செய்யாதே

காசி : தமிழின் வீடு பாண்டியநாடு

மாலா : அமுதம் போன்றது என்றே பாடு

**காசி :** ரசிகர் கொண்டாடவே நீ ஆடு
**மாலா :** விழியைக் காக்கும் இமையைப்போல
**காசி :** கலையை மக்களெல்லாம் காப்பாரிங்கே அன்போடு
**மாலா :** தருவார் வாழ்த்துக்கள் சொல்லும் ஏடு
**காசி :** கலைஞர் எல்லோர்க்குமே பண்போடு
**காசி :** காவேரி பாயும் மண்ணை—கண்ணால்
கண்டால் போதும் இன்பம் வரும் தன்னால்
**மாலா :** மாவோடு வாழை தென்னை
வளர்ந்தாடும் சோலையின் முன்னே
காணாத நெஞ்சமெல்லாமே
கொண்டாடிப்பாடும் (காவேரி)

---

*இயற்றியவர் :*
**பழனிச்சாமி**

குரல் :
**S. C. கிருஷ்ணன், ஜானகி & கோஷ்டியினர்**

**சிவன் :** வெண்ணையைத் திருடித்தின்று
வெறும் சட்டியான பின்னால்
மண்ணையும் உருட்டித்தின்று
மத்தாலே அடியும்பட்ட
**ஹரி :** அப்பா! முழுங்கு! முழுங்கிட்டுப்பாடு!
**சிவன் :** கண்ணனே உனக்குப் பாரிஜாதப் பூ
கொண்டுவந்தேன்
யாருக்குக் கொடுப்பாயோ—பூவை
கிருஷ்ணா
யாருக்குக் கொடுப்பாயோ.
**ஹரி :** சத்திய பாமையும் ருக்குவும்
ரெண்டு சாரையும் கீரியும் போலே—மனம்
ஒத்து ஒருத்திக்குப் பூவைக்கொடுத்தா
மத்தவ திட்டுவா பின்னாலே
இவளுக்கா அவளுக்கா
எவளுக்குப் பூவைக் கொடுப்பேன்—இதை
யார் தலையிலே நான் முடிப்பேன்.
ஆஹா...
திக்குத் திணற வைக்கும் ருக்மணியே—கண்ணால்
வக்கணைகள் பேசும் பத்தினியே!
சீவிமுடித்த உந்தன்
சிக்கு இல்லாத் தலையில்
பூவை முடித்து உந்தன்
பின்னழகைக் காணவந்தேன் (சிக்கு)

ரத்னம் : கொஞ்சும் கிளி என்னைவிட்டு
கோட்டானைக் கொஞ்சிப்புட்டு
வஞ்சனையை நெஞ்சில் சுமந்து
வந்தாயோ போ போ!

ஹரி : பாமா கோபம் ஏம்மா—சத்ய
பாமா கோபம் ஏம்மா! அந்த
வாசமுள்ள மலர்
பூத்த மரத்தையே
கட்டாயமாகவே வெட்டியே தாரேன் (பாமா)

---

இயற்றியவர் : அ. மருதகாசி குரல்: T. M. சௌந்திரராஜன்
திருச்சி லோகநாதன்
P. சுசீலா கோஷ்டியினர்

(சந்தனு—மச்சகந்தி நாட்டிய நாடகம்)

பெண்கள் : சிக்காத மீனும் வந்து
சிக்கவேணும்—தெய்வம்
நமக்குத் துணை
நிக்கவேணும்

ஆண் : சித்தாடை கட்டுகிற சிங்காரி வலையில்
தேடிவந்து வீழாத மீனேது உலகில்

மாலா : வித்தாரப்பேச்சு வீணாக ஏங்க
வேலையை ஒழுங்கா பாருங்க நீங்க (சிக்காத)

மாலா : அன்னம்போல் என் ஓடம் ஒய்யாரமாகவே
அசைந்தாடிப் போகுதே
சிங்காரத் தென்றல் தெம்மாங்கு பாடுதே
சில்லென்று அலைகள் கைத்தாளம் போடுதே
எண்ணாத எண்ணம் என் மனசு எண்ணுதே
என்னையறியாமலே இன்பவலை பின்னுதே (அன்னம்)

காசி : பெண்களும் கண்டு ஆசை கொள்ளும்
பேரழகுள்ள பெண்ணே உனது பேரென்ன, ஊரென்ன

மாலா : கங்கைக்கரையின் மீனவர்தலைவன்
அன்புச்செல்வி பரிமளகந்தி, நானய்யா, நானய்யா

காசி : அஸ்தினபுரியின் அரசன் என்னை
அக்கரை சேர்த்தென் ஆவலை நீயும் தீர்ப்பாயா, தீர்ப்பாயா

மாலா : அரைநொடிக்குள்ளே அக்கரை சேர்ப்பேன்
படகினில் ஏறி பாவையென் சமர்த்தை பாரய்யா நீ பாரய்யா

காசி : ஓ..ஓடம்தள்ளும் ஒய்யாரி உருகுறேனே நான் ஆசைமீறி
பாடும் குயிலே ஆடும் மயிலே வாடுறேனே நான் உன்னாலே
(ஓடம்)

**மாலா :** நாட்டை ஆளும் ராஜா—இது காட்டில் வாழும் ரோஜா
பாட்டை மாறிப்போகலாமா—சேட்டை நீயும் செய்யலாமா
(நாட்டை)

**காசி :** சேட்டை செய்து பாட்டை மாறி
செல்லச் செய்தது யாரம்மா—உன் ஈட்டிக்கண்களைக்கேளம்மா

**மாலா :** ஏய்க்கவேணும் ஏதோபேசி ஏழைநானும் வேறு சாதி (நாட்டை)

**காசி :** சாதி சமய பேதமே—உண்மைக்காதல் முன்னே ஏதம்மா

**மாலா :** காதல் கொண்டால் போதுமா—நாம் நீதி மறப்பது நியாயமா—என்
சாதி சனத்தார் தந்தை தாயார் சம்மதம் வேணுமா—
சொல்லுங்க (நாட்டை)

**காசி :** உன் பெண்ணை மணம் செய்ய உனைக்கோரி வந்தேன்
சம்மதம் தரவேணும் செம்படவ ராஜா

**ஹரி :** சம்மதம் தருவதில் தடையேதும் இல்லை
தயவோடு கேட்கணும் ஏழை என் சொல்லை
என் மகளின் வயிற்றிலே பிறக்கின்ற பிள்ளை
இந்நாட்டை அரசாளும் உரிமை தந்தாலே

**எல்லோ :** சிக்காத மீனும் வந்து சிக்கியாச்சு
தெய்வம் நமக்குத் துணை நிக்கலாச்சு.

---

***இயற்றியவர் :*** அ. மருதகாசி *குரல் :* **சீர்காழி கோவிந்தராஜன்**

ஆளுமரசே உனதருள் விழிப்பார்வை
ஏழை மீது ஏனில்லை இது வேளை (ஆளும்)

தர்மசீலா கலைவாணருக்குள்ளே
நானும் ஒருவனன்றோ (ஆளும்)

உந்தன் மீது பாமாலையும் சூடி
அன்பு ரூபம் தரும் போதையை நாடி
இன்பஞான ஒளி நான்பெறவே—நீ
எந்தன் மீது தயை செய்வாய் ஸ்வாமியே (ஆளும்)

---

*இயற்றியவர் :*
**தஞ்சை ராமய்யாதாஸ்**

*குரல்:*
**M. L. வசந்தகுமாரி**

அமிர்தம்

காதல் சிலை ஆடுதே—உந்தன்
கண்கள் கவி பாடுதே—கலைசேகரா உனது (காதல்)

மாதலம் புகழ்தீரா மலர்க்கணை சுகுமாரா
மனம்போலே சுகம் காணவே வேதனை அறியாயோ விரகமும்
உணராயோ
வாராய் கண்பாராய் ஒய்யாரா உன் ஆவலினாலே (காதல்)

மதுரஸ மலர் மேலே மருவும் வண்டினம்போலே
மகிழ்ந்திட விரைந்தோடிவா—ஸ்வாமி புதுநிலே அமுதாலே
பொன்னுடன் ஒளிபோலே வாழ்விலே என்னுளுமே
மனம் உனே தினம் நினேந்திடவே (காதல்)

வானத்தின் வில்போலே வசந்தத்தின் சுகம்போலே
வாலிபம் மறைந்தோடுமே—ஸ்வாமி மான் விழிக்கணேயாலே
மாரனும் தன்னுலே ஏங்கியே வில்லேந்தியே
என் பாங்கியே எனவே மயங்கிடுவான்

நியாயமா உனக்கிது முறையாகுமா
மனக்குறை இனி தீருமா
இதய நிலே மாறுமா
மேகவானில் மயில் மோகம் கொண்டு—அனு
ராகலீலே பெற ஆவல் மீறுதே
மதிவதனு இணே பிரியா துணேயே
மலரணே சுகம்பெற அழைக்குதே
சதா உந்தன் பதாம்புஜம் மறவேன்
ஈருடல் ஓருயிர் இன்புறவே
இளமை தனது நிலேமை இழந்து
அடிமை எனவே கலேயில் மயங்கி (காதல்)

---

*இயற்றியவர் :*
அ. மருதகாசி

குரல் :
T. M. சௌந்திரராஜன்

காசி

தொகையரு

ஆண்டவன் படைப்பிலே ஆதியிலே ஜாதிமத பேதமில்லே
அவையெல்லாம் பாதியிலே மனிதர்களால் வந்த தொல்லே

பாடல்

நந்தனின் சரித்திரம் அருமை
கானுரைப்பேன் அதன் பெருமை

ஆதனூரிலே சேரிதன்னிலே
அடிமை நந்தனும் பிறந்தானே

ஆணிப்பொன்னணி அம்பலவாணன்
அருளே நினேந்தே வளர்ந்தானே (நந்)

அந்தணராகிய ஆண்டையினிடமே
அம்பலம் செல்லவே விடை கேட்டான்

பண்ணே வேலேகள் பாங்குடன் முடித்தே
பறையா நீ போய் வா என்ருர்

தொகையரு

கண்ணீர் பெருக்கி நந்தன் கலங்கவே
கண்மூன் றுடையோனின்
கருணையால் அன்றிரவே
கழனியெல்லாம் நீர் பாய்ந்து பயிரேறி
கதிர் விளைந்தே தலை சாய்ந்தே நின்றதுவே
பக்தியின் மகிமையை வேதியர் உணர்ந்தே
பரிவுடன் போய்வர விடையளித்தார்
சிற்றம்பலத்திலோ சிவனை சேவிக்க
தீக்ஷிதர் அனுமதி தரமறுத்தார்
ஊணும் உறக்கமும் மறந்தே நந்தனும்
உள்ளம் உருகி நின்றிடவே உமையவள் நாதன்
அருளதினாலே உள்ளம் மாறிய மறையவரே
தியானத்தில் மூழ்கிய நந்தனை அழைத்தே
சிவனைச் சேவிக்கச் செய்தனரே
ஆனந்தக் கண்ணீர் பெருக்கிய அன்பன்
அருட் சோதியிலே கலந்தானே

---

*இயற்றியவர் :* அ. மருதகாசி

*குரல் :* T. M. சௌந்திரராஜன், P. சுசீலா

காசி : தெய்வம் நீ தானா — தர்மம் நீ தானா
தெய்வமும் தர்மமும் நீயென்பது மெய்யானால்
உறுதி செய்யவா — உன்னை
உலகம் காணவா தெய்வம் நீதானா
உருவைப்போல உனது நெஞ்சும் கருங்கல் ஆனதா?
உனையே சிலர் பொய்யென்பது உண்மையாகிப போனதா?
கருணை மனம் இல்லா உனைக் கடவுள் என்பதா?

மாலா : மானிட பலி வாங்கிட மனம் ஆசை கொண்டதா
ஆணவ மதப்பேய்களின் வெறி உன்னைக்கூட வென்றதா ?

காசி : உன் தன்மை உன் உண்மை உயிரற்றே போனதா?
இது உனக்கே அவமானம் ஏன் இன்னும் வீண் மௌனம்?

இருவரும்: உறுதி செய்யவா — உன்னை உலகம் காணவா

மாலா : நீயும் இந்தப் பாபம் தன்னை நிறுத்தாயோ ஜெகதீசா

காசி : நெற்றிக்கண்ணின் ஊழித்தீயில் சுட்டு அதைப் பொசுக்கிடு
நீலகண்ட ஆலகால விஷத்தை எங்கும் சிதறிடு
அன்யாயம் துன்மார்க்கம் நிர்மூலம் ஆகவே

சுபம்.

Printed at Sri Rajah Power Press, Madras-14.

# கலைவாணன்

## திரைக்குப் பின்

| | | |
|---|---|---|
| வசனம் | ... | ஸ்ரீதர் |
| வசன டைரெக்ஷன் | ... | நாகர்கோயில் பத்மநாபன் |
| சங்கீதம் | ... | பெண்டியாலா |
| பாடல்கள் | | மருதகாசி, கம்பதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ராமய்யாதாஸ், பழனிச்சாமி |
| பின்னணி | ... | T. M. சௌந்திரராஜன் சீர்காழி கோவிந்தராஜன், கண்டசாலா, திருச்சி லோகநாதன், S. C. கிருஷ்ணன், P சுசீலா, M. L. வசந்தகுமாரி, ஜிக்கி, ஜானகி |
| வாத்திய கோஷ்டி | ... | பிரசாதராவ் குழுவினர். |
| நடனம் | ... | வெம்பட்டி சத்யம் |
| கலை | ... | S. கிருஷ்ணராவ்<br>G. V. சுப்பாராவ் |
| ஸ்டில்ஸ் | ... | M. சத்யம், ஜெய்ஹிந்த் ஸ்டுடியோ |
| விளம்பரம் | ... | T. R. கண்ணன் |
| உடையலங்காரம் | ... | B. நாராயண ராவ் |
| மேக்-அப் | ... | ஹரிபாபு, நாகேஸ்வர ராவ், பீதாம்பரம், தனக்கோடி, சௌத்ரி, A. பெரியசாமி |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | T. R. கண்ணன்<br>G. V. கிருஷ்ண ராவ்<br>M. T. சிவகுரு |
| ஒலிப்பதிவு டைரக்டர் | ... | A. கிருஷ்ணன் B.A. |
| ஒலிப்பதிவு | ... | P. M. பழனி பாபு |
| பாடல்கள்—ரீ ரிகார்டிங் | ... | R. கண்ணன் (ரேவதி ஸ்டூடியோ) |
| எடிட்டிங் | ... | R. தேவராஜன் |
| ஒளிப்பதிவு டைரெக்டர் | ... | P. L. ராய் |
| ஆபரேடிங் ஒளிப்பதிவாளர் | ... | கோமன்ன ராமகிருஷ்ண ராவ் L. C. & S. E. |
| புராஸஸிங் | ... | S. ரங்கநாதன் (விஜயா லாபரேட்டரி) |
| ஸ்டுடியோ | ... | வாஹினி & விஜயா |
| உதவி டைரெக்ஷன் | ... | K. ராகவேந்திர ராவ், |
| | ... | U. V. ராவ் |

டைரக்ஷன்:
**P. புல்லய்யா, B.A.**

தயாரிப்பு:
**V. நாராயண ராவ்**